PERMANENT REFERENCE

# A Study on Job Satisfaction and Motiviation of CEB Employees in Batticaloa District

601.4 331191 6213 05493
VIM
PR
LIBRARY
Eastern University, Sri Lanka
12-2-2001

MISS. ARUMANAYAGAM VIMALARANI

FCM346
Project Report
Library - EUSL

Department fo Commerce
Commerce & Management
Eastern University
Sri Lanka.
2000

## 1.1 அறிமுகம்

விஞ்ஞான ரீதியாகவும் தொழில் நுட்ப ரீதியாகவும் மிக வேகமாக மாறிவருகின்ற இன்றைய உலகில் நிறுவனங்கள் மிக அதிகமாக போட்டி நிலமைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுவதுடன் மாற்றங்களையும் தம்மகத்தே கொண்டு நிறுவனங்கள் உயிர்த்திருக்கவேண்டிய அவசியம் காணப்படுகிறது.

தற்போதைய காலகட்டத்தில் இன்றைய நிறுவனங்களின் பிரதான இலக்காக விளங்குவது உள்ளீட்டின் பாவனையை உச்சப்படுத்தி சிறந்த வெளியீடுகளைப் பெறுதல் ஆகும். உள்ளீடுளை செயற் நேர்ச்சியுடன் செயற்திறனுடனும் கையாளுவதன் மூலமே வெளியீடானது எதிர்பார்த்த அளவுடனும் அமையும். இவ்வாறு உள்ளீட்டின் பாவனைகளை உச்சப்படுத்துவதற்கு உள்ளீடுகளில் ஒன்றாகவும் பிரதானமாகவும் காணப்படும் வளமாகிய ஊழிய வளத்தின் சிறப்புச் செயற்பாடு அவசியம் ஆகும். இவ்வூழிய வளமானது தனித்து சிந்தனை செய்து செய்யப்படக்கூடியதும், சிக்கலான மாற்றமடையும் நடத்தையைக் கொண்டதும், தூண்டுவதன் மூலமே தனது செயற்பாட்டில் மாற்றமடையக்கூடியதுமான காரணியாக ஊழிய வளம் விளங்குகிறது. எனவே இவ்வூழிய வளமானது சிறப்பாகச் செயற்பட அவர்களைத் திருப்திப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு ஊக்கப்படுத்தலை மேற்கொள்ளும் போது ஊழிய வளத்திறன் அதிகரித்து நிறுவன உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலம், நிறுவனம் நீண்டகாலம் நிலைத்திருப்பதுடன் குறிக்கோளையும் அடையக் கூடியதாக காணப்படும்.

## 1.2 பிரச்சனைகளை அடையாளம் காணல்.

இந்த வகையில் ஊழியர் திருப்தியும், தூண்டுதல் நடவடிக்கையும் பற்றிய ஆய்வாக மட்டக்களப்பு இலங்கை மின்சார சபை ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிறுவனம் ஒரு சேவை நோக்குள்ள நிறுவனமாகக் காணப்படுகிறது. இது அதிக ஊழியர்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. இங்கு பல தொழில்களையும் கொண்ட ஊழியர்கள் காணப்படுகின்றனர். இந்நிறுவனம் மட்டக்களப்பில் கல்லடி எனும் இடத்தில் அமைந்துள்ளது. இது சிறந்த முறையில் செயற்பட ஊழியர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமான ஒன்றாக காணப்படுகிறது. இங்கு ஊழியர்கள் திருப்தியற்று இருக்கக்காரணம் அவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கொடுபடாமல் இருத்தல், அவர்களுக்கான மேலதிக உதவிகள் செய்யக் காலதாமதம், அவர்கள் செய்யும் வேலைக்கான சம்பளம் அல்லது கூலி போதாமை மேலும் ஊழியர்களுக்கான அடிப்படை வசதிகளில் சிக்கல் தன்மை போன்றவைகளாகும். இதனால் அதிகரித்த ஊழியர் புரள்வு, உயர் வீத வரவின்மை, சீரற்ற நேரப்பதிவுகள், ஒழுங்கீனங்கள் போன்றன ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இந்நிறுவனத்தில் காணப்படும்.

எனவே ஊழியர்கள் மத்தியில் தொழில் திருப்தியின்மைகளை நீக்குவதற்கு என்னென்ன வகையான ஊக்குவிப்புக்களை வழங்கி அவர்களை தொழிலில் திருப்தி அடையச் செய்யலாம் என்பது பற்றியதாகவே எனது ஆய்வு அமைகிறது.

## 1.3 ஆய்வின் நோக்கம்.

இந்த ஆய்வின் நோக்கமானது இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் தொடர்பான பிரச்சனைகளான அதிகரித்த ஊழியர் புரள்வு, உயர்ந்த வீத வரவின்மை, சீரற்ற நேரப்பதிவுகள், வேலை ஒழுங்கீனங்கள் போன்றன காணப்படுகின்றன. அதில் இக்காரணிகளுள் மேற் சொன்ன பிரச்சினைக்கு இட்டுச்செல்லும் பிரதான காரணிகளை இனங்காணுதல்.